Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

குருவாக்கியம்

காஞ்சி ஸ்ரீமஹாபெரிவாளின் அருட்பெருமை

எழுதியவர்
வேதாந்தகவியோகி நாக.ஸுந்தரம்
புதுடில்லி

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection Nev

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

ஸ்ரீகுருப்யோ நம:

குரு வாக்கியம்

ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவா அருட்பெருமை

எழுதியவர்:

வேதாந்த கவியோகி நாக.சுந்தரம்

S/O ஸ்ரீ அருட்சக்தி நாகராஜன்

புதுடில்லி

14-01-2013

மகர ஸங்க்ராந்தி தினம்

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

Sri Gurubhyo Nama:

குருவாக்கியம் பற்றி சில வாக்கியங்கள்

அன்பும் அருளும் கருணையும் நிறைந்த மஹான்களைப்பற்றி சொல்வதும் நினைப்பதும் நமது வாழ்க்கையை சரிசெய்து கொள்வதுடன் ஆத்மாபிவிருத்திக்கும் வழிசெய்து கொள்வதாகும். நமது பாரத நாட்டில் அநேக மஹான்கள், ரிஷிகள் என இருந்தார்கள். இருக்கிறார்கள். இருப்பார்கள். அந்த வழியில் நம்மை வாழ்விக்க அவதரித்த யுகபுருஷர் நமது காஞ்சிமஹான் **ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்.** அவர்கள் காஞ்சி மடத்தின் பீடாதிபத்யம் வகித்துக் கொண்டே மனித ஜீவாத்மாக்கள் உய்யும் வழியை காட்டிய வள்ளல்.13 வயது சிறுவனாக பீடமேறிய அவர்கள் அன்று தொட்டு அவர் சித்தி யடைந்த 100 வயது வரை பாரத நாடு முழுவதும் நடந்தார்கள். மூலை முடுக்கிலுள்ள குக்ராமங்களுக்கும் போயிருக்கிறார்கள். நாட்டின் தலைவர்கள் முதல் காட்டில் விறகு பொறுக்கும் சிறுவன் வரை அத்தனை பேருக்கும் அருளையும் அன்பையும் பொழிந்திருக்கிறார்கள். அவர்கள் பேசாத மொழி யில்லை. பார்க்காத நூல்கள் இல்லை. அந்நிய நாட்டவருக்கு கூட அருள் கிடைத்திருக்கிறது. ஸ்ரீரமணமகரிஷியை பகவானாக உலகறிய செய்தவர்கள். வேதத்தையும், வேதாந்ததையும் அழியாமல் காத்தவர்கள். தனியொரு மனிதனுக்கும் அவனது ஆராதனை தெய்வமாக இருப்பவர்கள். பல ஆயிரக்கணக்கான குடும்பங்களில் இன்றும் அவர்கள் அரூபமாக அருளை அள்ளி கொடுத்து வருகிறார்கள். அனேகரின் நித்ய வாழ்க்கையை செம்மை செய்தவர்கள்.

தமிழ் நாட்டில் பிரபலமான குஹானந்தமண்டலி என்கிற ஸ்ரீவித்யா மண்டலியில் சிறந்த மூத்த உபாசகர் பிரஹ்மஸ்ரீ ஸி.வி.ஸ்வாமி சாஸ்த்ரிகள் என்ற **ஸ்ரீஅனந்தாநந்தநாதர்** என்பவர்கள். அவர்கள்தான் எனது குருநாதர் ஆவார். ஸ்ரீபெரியவாளுடன் இவர்களுக்கு இருந்த தொடர்பும், நெருக்கமும் அவர்களே சொல்லக்கேட்டவன் நான். எங்கள் குடும்பமும் எங்கள் தாத்தா காலத்திலிருந்தே காஞ்சிமடத்தில் பக்தி கொண்டது. இந்த ஆன்மீகப் பற்றினால் தான் எனது குமாரன் **ஸ்ரீநாக.ஸுந்தரம்** ஸ்ரீமஹா பெரியவாளை பற்றி கவிதைகள் எழுதி யுள்ளான். இதில் ஆதிசங்கரர் காலம் தொட்டு மஹாபெரியவா வரை கவிதைகள் உள்ளன. கோவிந்தபுரம் பெருமையும் உண்டு. அங்கு 68

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

பெரியவாளின் ஸமாதிகளுக்கும் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அதன் தரிசனத்துக்கு பின்பே இக்கவிதைகள் வந்தன. அதன் அமைப்பு சிவவாக்கியர் என்ற சித்தர் எழுதியுள்ள சிவவாக்கியம் என்ற நூலின் பாக்கள் அமைப்புபோல் உள்ளது. அதனால் இது குருவாக்கியம் என்ற பெயரில் அமைத்தோம். ஸ்ரீ நாகஸுந்தரம் தன் இளவயது தொட்டே கவிதை எழுதும் பழக்கம் உண்டெனினும் இந்த குருவாக்கியம் செய்ததே பிறவி பயனாம்.

இன்றைய தலைமுறை மக்கள் தங்கள் வாழ்க்கையில் பலவிதமான சமூக நடைமுறையில் ஆட்பட்டு திணருகிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல ஆன்மீக வழிகாட்டி மஹா பெரியவாளின் தெய்வத்தின்குரல் என்ற தொகுப்பு நூல் மட்டுமே! அது பல பாகங்களாக கிடைக்கிறது. அதில் நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று எத்தனை அறிவுரைகள் தாயைப்போல் வழங்கியிருக்கிறார்கள். அதுவே இன்றைய தலை முறைக்கும் வருகின்ற தலைமுறைக்கும் வேதநூலாகும். பெரியவாளை பற்றி இன்றைய சமூக வலைதளங்களாலும், ஆன்மீக சொற்பொழிவாளர்களாலும் இப்போது நிறைய வெளிவந்த வண்ணமிருக்கின்றன. இதன் மத்தியில் இந்த கவிதை தொகுப்பும் உங்கள் பார்வைக்கு வருகின்றது. எனவே அனைவரும் குறிப்பாக இளைஞர்களும், மணவாழ்க்கையில் புகுபவர்களும் பெரியவாளின் அருள்மொழிகளை உள்வாங்கி செயல்பட வேணுமென்பது அடியேனின் வேண்டுகோள். அதற்கு இந்த குருவாக்கியம் திறவு கோலாக இருக்கட்டும். இதனை எழுதியவருக்கு ஸ்ரீமஹாபெரியவாளின் திருவருளே நிறைந்த செல்வமாகும். குருவருளாம் திருவருளை பெற்றபின் வேறு என்ன வேண்டும்?

இந்நூலை வெளியிடும் பாக்கியம் சென்னை ஸ்ரீ. S. ஸ்ரீதரன் குடும்பத்துக்கு கிடைத்தது அவர்களின் குருபக்தியே ! அவர்களுக்கு ஸ்ரீ குருமண்டலத்தின் நல்லாசிகள்.

உங்கள் சொந்த ஆத்மன்,
அருட்சக்தி நாகராஜன்,
நிறுவனர் & தலைவர்
ரிதம்பரா ஞான ஸபா
புதுடில்லி
14-01-2013

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

ஆசியுரை:

ஸ்ரீ மகா பெரியவாளைத் துதிக்கும் இந்த கவிதை நூலுக்கு அவர்களின் ஆசி வேணுமில்லையா? அதனால் நமக்கு அஹம்பாவம் ஏற்படாதிருக்க அவர்களின் அருள் வாக்கையே இங்கே படித்து விடுவோம். அனுபவத்துக்கும் கொண்டுவருவோம்.

அம்பாள் இருக்க அஹம்பாவம் ஏன் ? - மஹா பெரியவா

நாம் இதைச் சாதித்தோம், அதைச் சாதித்தோம் என்று அகம்பாவப்பட கொஞ்சம்கூட நியாயம் இல்லை. நாம் எதையும் சாதிப்பதற்கான புத்தியோ, தேக பலமோ எங்கிருந்து வந்தது? இந்த பிரபஞ்ச காரியங்கள் அனைத்தையும் செய்கிற ஒரு மஹாசக்தி யிடமிருந்தே நம்முடைய, சக்தி எல்லாம் வந்திருக்கிறது. அது இல்லாவிட்டால் நம்மிடம் ஒரு சுவாசம்கூட இருக்கமுடியுமா. ஒருநாள், இதனை சாதித்ததாக எண்ணிக் கர்வப்படுகிற நம்மைவிட்டுச் சுவாசம் போய் விடுகிறது. அதைப் பிடித்து வைத்துக் கொள்கிற சாமர்த்தியம் நமக்குக் கொஞ்சம்கூட இல்லை. அப்போது நம் சக்தி எல்லாமும் சொப்பனம் மாதிரிப் போய்விடுகிறது. கொஞ்சம் யோசித்துப்பார்த்தாலும்கூட, சக்தி சமுத்திரமாக இருக்கப்பட்ட அம்பாளின் ஒரு சிறு துளி அநுக்கிரகத்திலேயே நடக்கிற காரியங்களை, நம்முடையதாக நினைத்து அகம்பாவப்படுவது அசட்டுத் தனம்தான் என்று தெரியும். எத்தனைக் கெத்தனை இந்த அநுபவத்தில் தெரிந்துகொண்டு அம்பாளுக்கு முன் ஒரு துரும்பு மாதிரி அடங்கிக் கிடக்கிறோமோ அத்தனைக்கத்தனை அவள் அநுக்கிரஹமும் நமக்குக் கிடைக்கும்.

நாம் நன்றாக எழுதுகிறோம், பேசுகிறோம், பாடுகிறோம், வேறு ஏதோ காரியம் செய்கிறோம் என்று உலகம் புகழ் மாலை போடுகிறது. அதே சமயத்தில் நமக்குத் தலைகனம் ஏறத்தான் தொடங்கும். அப்போது நமக்குச் சக்தி உண்டா என்று யோசிக்க வேண்டும். எந்த இடத்திலிருந்து நம் சக்தி வந்ததோ, அந்த அம்பாள் இருக்க, புகழுக்குப் பாத்திரராகி அகம்பாவப்பட நமக்குக் கொஞ்சம்கூட உரிமையில்லை என்று உணர வேண்டும். வருகிற பெருமையை எல்லாம் அவற்றுக்குறிய பராசக்தியின் பாதார விந்தங்களி லேயே அர்ப்பணம் செய்துவிட வேண்டும். பெருமைப் பூரிப்பில் இருப்பதைவிட, இப்படி அர்ப்பணம் பண்ணிப் பாரம் இல்லாமல் லேசாக ஆவதுதான் நமக்கே பரம சௌக்கியமாக இருக்கும். நமக்கு அகம்பாவமே இல்லை என்கிற எண்ணம் வந்து அதில் ஒரு பூரிப்பு உண்டாகிவிட்டால், அதுவும்கூட அகம்பாவம்தான். எனவே அகம்பாவம் தலை தூக்க இடமே தராமல் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எத்தனை கண்குத்திப் பாம்பாக இருந்தாலும், துளி இடுக்குக் கிடைத்தால்கூட ஏதோ ஒரு ரூபத்தில் நமக்கே தெரியாமல் அஹம்பாவம் உள்ளே புகுந்து விடும். இது போகவும் அவள் அருள்தான் வழி. அவளேயே வேண்டி நம் புகழையெல்லாம் அவளுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டால், நமக்கு ஒரு குறைவுமில்லாமல் மேலும் மேலும் அவள் அநுக்கிரஹம் கிடைக்கும்.

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

உ

ஸ்ரீகுருப்யோ நம:

குரு வாக்கியம்

ஸ்ரீ மஹாபெரியவா அருட்பெருமை

வேதாந்த கவியோகி நாக.சுந்தரம்

காப்பு

அஞ்சுமுகம் கொண்ட ஆனை முகம் கொண்டவன்
காஞ்சியியின் பரம்பரையில் வந்த குருதன் புகழினை
கொஞ்சம் நாமும் உரைத்திட உரந்தன்னை அளிப்பவன்
தஞ்சமென அடைந்திட்டேன் தத்துவத்தை அருளிடே !

பரத்தின் பக்குவத்தை பாரில் பகரும் பரம்பரா !
பரமென்றால் பரம்பொருளாம் குருதத்வ பரம்பரா!
பரத்தைத்தவிர பாரில் எதுவுமில்லை பற்றுக்கொள்ள
பரத்தைப் பிடித்து பரமடைய பக்குவவழியிதுதானே!

நாவில் நின்று காப்பவள் நல்லவரின் சொத்தவள்
பாவில் பொருள் தருபவள் பக்தருக்கு அருள்பவள்
தாவி தாவி ஓடுகின்ற மனந்தன்னில் அமர்ந்துமே
மேவி நிற்கும் குருவாக்கியம் மேதினிக்கு அருளுவாய் !

சிவவாக்கிய சந்தத்திலே குருவாக்கியம் எழுதிட
தவறாது தத்துவத்தை தரணிக்கு தந்திட
பவரோகம் நீங்கிடவே பாக்களிதைப் படித்திட
நவநவமாய் நலம்தந்த நாயகியைப் பணிந்திட்டோம் !

காஞ்சிபீடம் அமர்ந்திட்ட குருநாதர் பெருமையை
துஞ்சிடாமல் தந்திடவே திறமையினை தருவரே !
விஞ்சி நிற்கும் மஹிமையினை விரித்துரைக்க வந்துமே
மிஞ்சிடாது மேதினியில் மக்களிதை உணர்வரே !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

கோவிந்தபுர மஹிமை

கரத்திலே அனுக்ரஹிப்பார் காஞ்சி வாழ்ந்த பெரியவர் !
தரத்திலே ஈடுசொல்ல தரணியிலே ஒருவரோ ?
வரம் கொடுப்பதெவ்விடம் ? வேதம் காப்பதெவ்விடம்?
புரத்திலே சிறந்தபுரம் எந்தபுரம் அறிவீரோ?

கோவிந்த புரமது கோவிலிலே சிறந்தது !
தாவுகின்ற மனமது தத்துவத்தை அறிவது !
மேவுகின்ற மண்ணிலே மஹிமையை தருவது !
கூவுகின்ற கோழியும் கோவிந்தனை கூவுமே !

பார்க்க வந்த பக்தர் தமக்கு பக்கத்தில் வந்துமே
பார்க்க வேணும் புரமதை கோவிந்த புரமென
காரிலே சென்றபோது புரத்திலே வந்து நிற்க
பாரிலே இந்த புரம் பார்க்க பார்க்க பரவசம் !

சேர்ந்து நின்ற சிற்பிகள் செய்துவைத்தார் சிலைகளை !
வார்த்த சிலை பேசுமோ ? பார்த்த கண்கள் கூசுமோ?
நோர்த்த நோன்பின் நலத்திலே நாட்டில்நலம் விளைந்ததோ?
கார்த்து நிற்கும் புரமது கோவிந்த புரமதே !

விரிந்த இந்த மண்ணிலே வேதம் வாழ்வதெவ்விடம் ?
விரிந்த காவிரி தனிலே பாதம் பட்டதெவ்விடம் ?
தெரிந்து கொண்டு தன்னையே தானறிவதெவ்விடம் ?
புரிந்து கொண்டு சிறப்பமே கோவிந்த புரத்திலே !

ஒருமுறை பார்த்திட்டால் உண்மை உள்ளம் அறியுமே !
கருவிலே பிறந்திடாத கருத்தும் உள்ளம் சேருமே !
உருவிலே உள்ளரே உயர்ந்த ஞானம் தருவரே !
மருவிலாத மனதிலே மங்களங்கள் மலருமே !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

கோவிந்தா என்று சொன்னால் கோடி வினை அகலுமே !
தாவுகின்ற மனமது தத்துவங்கள் பல சொல்லுமே !
பாவியும் பரகதிக்கு போகும் வழி திறக்குமே !
கோவிந்த புரமது குவலயத்தில் சுடருமே !

காவி உடை தரிந்த உரு கண்ணெதிரே தோன்றுமே !
நாவிலே நாரணன் நாமம் வந்து நிற்குமே !
பூவிலே சிறந்த பூவை பாதத்திலே போடுமே !
சாவிலாத சங்கடங்கள் சூதுவாது மறையுமே !

தேவ தேவ தேவரும் தரணிக்கு வருவரே !
பாவமெலாம் போக்கிட புரமிதற்கு வருவரே !
நாவலர் புலவரெலாம் நல்ல கவி சொல்லிட
காவலராய் குருநாதர் புரமிதிலே நிற்பரே !

சஞ்சலம் வந்தபோது சற்றெடுத்து படிக்கலாம் !
பஞ்சாக பறந்திடும் பாடும் நாமம் பரமனே !
உஞ்சவ்ருத்தி எடுப்பினும் உந்தன் நாமம் உரைப்பனே !
தஞ்சாவூர் மண்ணிலே திருவெனவே திகழ்வாரே !

பாவியையும் கடைத்தேற்றி பாதுகாக்க வைத்திடும்
புவியினிலே பக்தருக்கு புண்ணியத்தை தந்திடும்
நாவினிலே நடம் புரிவாள் நல்மடந்தை அவளுமே
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

காவியுடை தரித்த குரு தங்குகின்ற க்ஷேத்திரம்
தூய்மையையே தன்னிடத்தில் தாங்குகின்ற இடமது
சேயாக எமைக்காத்து சத்தியத்தை சொல்லிடும்
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

சங்கரர் முதலாக ஸத்குருக்கள் வசிப்பது
வங்கம் முதல் கன்னியீராய் வேராக இருப்பது
தங்கமென ஜொலிக்கின்ற தத்துவத்தை தருவது
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

மண்ணிதிலே மணம் வீசும் மங்களங்கள் கொண்டது
தன்னிழலில் தரணியினை தாங்கியே நிற்பது
பன்முக ப்ரம்மனும் பார்த்து வியந்து உயர்ந்தது
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

கவியெழுதும் புலவருக்கு கருத்தாக ஆனது
அவிகொள்ளும் அமரருக்கு ஆறுதலாய் இருப்பது
பவித்திடும் பக்குவத்தை பதமாக தருவது
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

கோவிந்தா என்றுசொன்னால் கோடிவினை அகலுமே
கோவிந்தா என்றுசொன்னால் பரகதியும் கதிக்குமே
கோவிந்தன் பெயரில் இந்த கோவிலும் ஆனதே
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

நாமத்தை ஸிந்தாந்தம் செய்த ஒரு போதேந்த்ராள்
ஸாமவேத ஸாரமதாய் சத்தியத்தை சொன்னவராம்
நாமம் நம்மை காத்திடும் நலமும்பல உதித்திடும்
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

பெரியவாளும் இருக்கிறார் பரமனாரும் இருக்கிறார்
அரிதான அனைவருக்கும் அங்கிருக்கு ஸமாதியையும்
மரிக்கும் முன்னே ஒருமுறை கண்ணில்காண வேண்டுமே
புவியினிலே சிறந்தது எங்கள் கோவிந்த புரமதே

ஸ்ரீஆதி சங்கர பகவத்பாதாள்

பவமது பொசுங்கிப்போக தவமதை திடமாய்க் கொண்ட
அவமதை அழிக்கும் நோக்கில் அத்வைத கொள்கை தன்னை
அவனியில் அருளாய்ப் பொழிந்து ஆங்கொரு காலடி தன்னில்
சிவமது ஸ்தூல வடிவில் சங்கரராய் வந்ததம்மா !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

ஆதி குரு தென்முகத்தான் அவனியில் அவதரிக்க
பேதமான பல மதங்கள் பேர் இன்றிப் போனதம்மா !
வேதமதை வகுத்த வியாஸர் வயதினை வாகாய் அருள
பாதையைப் போட்டுவிட்டார் பகலவன் பாரில் பலவே !

வேதசிகை உரையைத் தந்து விவேகத்திற்கு நூலைத் தந்து
ஆதாரம் ஆறுக்கும் ஆங்கே ஆழியென அழகைக் (ஸௌ.ல.) காட்டி
பாதார விந்தம் நினைந்து பஜகோவிந்த பாடல் பாடி
சாதாரணம் இல்லை அம்மா (அவர்) சாதித்த செயல்கள் இங்கே !

இங்கேயே இருந்த படியே இறைவனை காண வைத்தார் !
அங்கிங்கு அலையும் மனதை அடக்கிடும் வழியைத் தந்தார் !
திங்களை தலையில் தரித்த தீரனவர் தரணி இதிலே
சிங்கமென பவனி வந்தார் ! சரணத்தைப் பிடிக்கச் சொன்னார் ! (அன்று)

சொல்லாமல் சொன்னவர்தான் சாத்திரம் பல வகுத்தார் ! (இன்று)
கல்லாலில் அமர்ந்த குருதான் கால்தேய நடந்து வந்தார் !
வல்லவராய் வகுத்த பாதை வேதத்தின் சாரம் சொன்னார் !
நல்லவர் அவரின் வழியில் நாமிங்கே செல்ல வேண்டும் !

வேறு

ஆதியில் வாழ்ந்த சிவம் அங்குவிட்டு வந்தது !
வேதியராய் வந்துதித்து வேதமதம் காத்தது !
காதிலே சொல்லும்மந்த்ரம் கடவுள் நீ என்றது !
சேதி சொல்லி ஜகத்தைவிட்டு சோதியாகி போனது!

2.ஸ்ரீசுரேச்வராசார்யாள் (407 பி.சி.)

மண்டனமிச்ர பேரும் கொண்ட மஹான் அவரும்தன்
மனைவியாம் ஸரஸவாணி தன்னுடன் தானும்
மாஹிஷ்மதி தன்னில் மஹான் சங்கரருடனே
மங்களவாதமிட்டு மீமாம்சை தனை உணர்ந்தார்!

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

மண்டன மிச்ரரவர் மிக வாதம் செய்திட்டார்
கண்டனத்தை செய்துமவர் கர்மமே உயர்வென
விண்டுரைத்து வேதத்தை விளக்கமா உரைத்துமே
ஆண்டவரை சீடராக ஆதிசங்கரர் அருளினார் !

சுரருக்கெல்லாம் ஈசனவர் எங்கள் சங்கரரின் சீடரே !
வரத்தைப்பெற்று வாதம் செய்து வீரனாக இருந்தவர் !
தரமான தங்கம் போன்று தத்துவத்தை தந்தவர் !
துறவறத்தை தூய்மையாக்கி தரமாக ஆனவர் !

கர்மம் வேறு ஞானம் வேறு வாதம் செய்த மிச்ரரே !
கர்மம் ஒன்று ஞானம் ஒன்று நன்றாய் அறிந்து கொண்டாரே !
பூர்வம் இருந்த மீமாம்சை புனர் ஜன்மம் பெற்றதே !
ஆர்வம் கொண்டு ஆண்டவரை அழகாய் அறிந்த சூரரே !

நூல்கள் பல தானும் செய்து நமக்கு நன்மை செய்தவர் !
சூல்கள் கொண்ட புஷ்பமாக சூக்குமத்தை அறிந்தவர் !
நால்வரிலே மூத்தவர் ! நைஷ்கர்மம் தெரிந்தவர் !
கால்கள் தன்னை பணிந்திட காலன் தூர ஓடுமே !

காஞ்சி காஞ்சி என்று சொல்ல கர்மமது தொலையுமே!
காஞ்சி காஞ்சி என்று சொல்ல காசினியும் மறையுமே !
காஞ்சி காஞ்சி என்று சொல்லி காஞ்சியிலே வாழ்ந்தவர் !
மறைந்து போனதெவ்விடம் ? மக்கள் காண வல்லரோ ?

தெருவும் உண்டு அவர் பெயரில் தெரிந்து கொள்ள வேண்டுமே !
கருவில் செல்லா கருத்தையும் காட்டிவிட்டார் குருவுமே !
பெருமை பெற்ற காஞ்சியில் பேதம் தன்னை நீக்கியே
அருமையாக இருந்தவர் அவரையும் நாம் அறிந்து கொண்டமே !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri Funding by MoE-IKS

3. ஸ்ரீஸர்வக்ஞாத்மேந்த்ர ஸரஸ்வதி 467-364 பி.ஸி.

ஸர்வக்ஞ பீடமேறி சாதனையைச் செய்திட
ஸகலமான நகரிருந்தும் ஸகலருமே வந்திட்டார்
பகலவனாய் பேதம் நீக்கி ஏழு வயதில் அவ்விடம்
மகனொருவர் வந்திட பீடத்திலே அமர்த்தினார் !

சுரேச்வரரும் அவருக்கு ஸகலத்தையும் கற்பித்தார் !
உரம் மிகுந்த ஸர்வக்ஞர் உத்தனாய் திகழ்ந்திட்டார் !
கரம் உயர்த்தி காட்டியே காலத்தினை வென்றிட்டார் !
திறமுடனே சூத்திரமும் தீர்மானமாய் செய்திட்டார் !

பதினான்காம் நாளிலே பரம்பொருளை சேர்ந்திட்டார் !(சதுர்த்தசி திதியில்)
விதவிதமாய் நூல்களை விவரமாக ஆக்கிட்டார் !
பதவிசான நள வருடம் பேதம் தன்னை நீக்கிட்டார் !
நித்தியமாய் நம்மிடம் நல்விதமாய் நின்றிட்டார் !

4. ஸ்ரீஸத்யபோதேந்த்ர ஸரஸ்வதி 268 பி.ஸி.

ஸத்தியத்தின் போதமே நித்தியத்தின் நாயகம் !
பத்தி செய்ய பாத்திரம் ! போதமஞ்சும் நாடகம் !
உத்தி தந்ததெவ்விடம் ? உறவுமான தெவ்விடம் ?
கத்தி கத்தி சொல்லுகின்ற குருவும் அந்த நாதரே !

சாங்கியர்கள் ஜைனர்கள் பயந்து ஓடி மறைந்தனர் !
ஆங்குதானே போதேந்தர் அன்புருவாய் இருந்தனர் !
அங்குமிங்கும் அலைவதோ? அலைதல் விட்டு நிற்பதோ?
பொங்கும் ஞானம் பூத்திட புலவராக பரவினார் !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

5. ஸ்ரீஞானானந்தேந்த்ர ஸரஸ்வதி 205 பி.ஸி.

உத்தமராம் உயர் குரு ! உயர்வான திராவிடர் !
நைஷ்கர்ம்ய ஸித்தியினை நன்றாக எழுதினர் !
சந்திரிகை என்ற பெயர் சாத்திரமாய் அமைந்தது !
சகோரமாய் அதனையே சத்தியமாய்க் காண்பமே !

காஞ்சியின் பெருமை கூற நாக்கள் பல போதுமோ ?
காஞ்சியின் பெருமை கூற நாட்கள் பல போதுமோ ?
விஞ்சி நிற்கும் அதன் பெருமை வீரமாக உரைப்பரே !
தஞ்சமாக அடைந்திட தயையும் நன்றாய் தருவரே !

6. ஸ்ரீசுத்தாநந்தேந்த்ர ஸரஸ்வதி ! 124 பி.ஸி.

பர்வு என்ற பண்டிதர் திருமறையில் வாழ்ந்தவர் !
கர்வமில்லா குமரராய் விச்வநாதர் விளங்கிட்டார் !
ஆர்வமுடன் அவரேதான் சுத்தரென்ற குருவானார் !
திருமிகுந்த காஞ்சியில் தத்துவத்தின் உருவானார் !

7. ஆனந்தகனேந்த்ர ஸரஸ்வதி 55 பி.ஸி.

சின்னய்யா என்ற பெயர் சீராகக் கொண்டவர் !
மின்னழகு கௌரியிடம் பாசம் மிகக் கொண்டவர் !
அன்னவர்க்கு வாக்கு வன்மை அதிகமாக வந்தது !
முன்னவரின் வாடிகையை மேதினிக்குத் தந்தவர் !

8. கைவல்யானந்த யோகேந்த்ர ஸரஸ்வதி 28 ஏ.டி.

திருப்பதியில் துலங்கும் தெய்வம் தரணியது அறியுமோ?
கருப்பொருளாய் விளங்குவது காசினிக்கு தெரியுமோ?
திருவருளைத் தந்திடவே அருட்குருவாய் வந்ததோ?
பெரியவாளாய் பிறந்தது ! பக்குவத்தைக் கொண்டது !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

9. கிருபா சங்கரேந்த்ர ஸரஸ்வதி 69 ஏ.டி.

சங்கரரின் ரூபமாம் சத்தியத்தின் வடிவமாம் !
திங்களாக வந்துதித்து தீயவற்றை அழித்ததாம் !
பொங்குகின்ற மங்களத்தை புவனத்திலே புலரவைத்து
அங்குமிங்கும் அலைந்துமே அவதாரமாய் நின்றதாம் !

வண்டி வண்டியாய்ப் பணத்தை காத்துநிற்கும் மாந்தரே
உண்டியிது போனபின்பு அந்தபணம் வந்துதவுமோ?
அண்டமிதில் ஆண்டவன் அந்தர்யாமியாய் நிற்கையில்
கொண்டவித்தை காத்துமே கருணையினை சேருமே !

கருணையின் வடிவமாம் கிருபா சங்கர இந்திரர் !
கருணையினால் காசினியை காத்துநின்ற மித்திரர் !
இருயிணையடியை இருநிலத்தில் இருத்திய இந்திரர் !
கருப்பொருளைக் காட்டியே காததூரம் கடந்தவர் !

10. ஸ்ரீசுரேச்வரர் (ஏ.டி. 127)

மஹேச்வரர் என்ற பெயரில் மஹிமைதனை சேர்த்திட்டார் !
அஹம் பதம் தன்னை மனம் அறிந்திடவே வைத்திட்டார் !
வகைவகையாய் வேதாந்தம் வாகாக உரைத்திட்டார் !
சிகைகுனிய பணிந்திடுவோம் ஸஹஜநிலை சேர்த்திடுவார் !

11. ஸ்ரீசிவானந்த சித்கனேந்த்ர ஸரஸ்வதி (ஏ.டி.172)

ஐந்தெழுத்தை போற்றினால் அத்வைதம் ஆகுமோ ?
ஐந்தெழுத்தை போற்றியே அத்வைதம் கண்டவர் !
ஐந்தெழுத்து அதற்குள்ளே அந்தசிவன் உள்ளாரே !
ஐந்தெழுத்து மந்திரம் அவனியிலே சிறந்ததாம் !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

12. ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி (ஏ.டி.235)

யோகமெல்லாம் அறிந்தவர் ! யோகியாகத் திகழ்ந்தவர் !
சேஷாசலத்தினிலே சேர்நதுவிட்டார் ஸித்தியால் !
ஆசாபிசாசினையே அருளாலே துரத்தினார் !
வேஷத்தை துறந்துமே வியனுலகை மறந்திட்டார் !

13. ஸ்ரீஸத்சித்கனேந்த்ர ஸரஸ்வதி (272 ஏ.டி.)

கடிலத்தின் கரையிலே நம்மை கரைசேர்க்க வந்தவர் !
கடினமான வித்தையில் கரைகண்ட கனேந்த்ரர் !
துடிப்பான மடம் துறந்து துறவியாகி சென்றவர் !
அடியினை பிடிப்போம் ! அத்வைதம் அறிவோம் !

காயத்தை விட்டுவிட்டு காஞ்சிசிவன் ஆனவர் !
வாயினாலே பெயர்சொன்னால் வாஞ்சிதார்த்தம் அருளுவார் !
போய்விடும் பிழைகளும் பக்குவமும் வந்திடும் !
தூய்மையான மனத்திலே தாய்மை தன்னை தருபவர் !

14. ஸ்ரீவித்யாகனேந்த்ர ஸரஸ்வதி (317 ஏ.டி).

கோபம் வந்த பேர்களுக்கு கொதித்திடும் குருதியே !
கோபம் தன்னை போக்கினால் குளிர்ந்து மனம் ஆகுமே !
கோபம் தன்னை நீக்கினார் ! பைரவரும் குளிர்ந்திட்டார் !
சாபத்தினை போக்குகின்ற வித்யாகனர் சேர்வமே !

15. ஸ்ரீகங்காதரேந்த்ர ஸரஸ்வதி (329 ஏ.டி.)

கங்கை தரும் தூய்மையே கங்காதரரும் தருவாரே !
சங்கை நீக்கும் சாத்திரம் சடுதியிலே செய்வாரே
நங்கை திங்கள் தரித்தவர் நாதனாக கொண்டவர்
அங்குமிங்கும் அலைந்ததிடும் அனைவர் மனம் காப்பவர் !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

16. ஸ்ரீஉஜ்வல சங்கரேந்த்ர ஸரஸ்வதி (367 ஏ.டி.)

பந்தம் போக வேண்டுமென்றால் பரம பக்தி வேண்டுமே
அந்தமில்லா ஜோதியை அறிந்து காண வேண்டுமே
சொந்தமாக வந்தவர் ஜோதி காண வைத்தவர் !
சிந்தனையில் சிவனை வைத்து ஜகத்தினை சுற்றினார் !

17. ஸ்ரீஸதாசிவேந்த்ர ஸரஸ்வதி (375 ஏ.டி.)

காச்மீரம் அவதரித்து காஞ்சி வந்ததசியம் !
பூசைசெய்து பரசிவத்தை பார்க்க வைத்த வைபவம் !
ஆசைதன்னை நீக்கிவிட்டால் அனைவருமே அந்தணர் !
பாசமிக வைத்தவர் பரசிவத்தைக் கண்டவர் !

18 பீடாதிபதி முதல் 58 பீடாதிபதி வரை

அனைவருக்கும் வந்தனம் அன்பினாலே சொல்லுவோம் !
இணையில்லாத பெருமைகொண்டோர் ஏராளம் இருந்திட்டார் !
கணக்கின்றி எழுதிட காலம் போதவில்லையே !
மனத்தினிலே மஹிமை எண்ணி மாதாவைப் பணிவமே !

அஞ்சி அஞ்சி வாழும்வாழ்க்கை அவனியிலே தொல்லைதான் !
அஞ்சிடாதே என்று சொல்ல ஆயிரம் குருக்கள்தான் ! (கண்)
துஞ்சிடாமல் எழுதிட தூண்டுகோல்கள் உண்டுதான் !
எஞ்சி நின்ற பெரியோரை ஏற்றமென எண்ணுங்கள் !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

59. ஸ்ரீபகவன்நாம போதேந்த்ர ஸரஸ்வதி (1692 ஏ.டி.)

போதேந்த்ராள் என்றதும் போய்விடுமே பாவங்கள் !
காததூரம் ஓடிடும் கர்மவினை அனைத்துமே !
நாமத்தினை சிந்தாந்தம் நானிலத்தில் செய்திட
பாமரரும் படித்திட பலநூல்கள் செய்தாரே !

கௌமுதி என்ற ஒரு நூலைக் காலமெலாம் தேடினார்!
நாட்டிலெல்லாம் அலைந்துமே மிகவுமே களைத்திட்டார் !
நாட்டிலோ சிறந்ததெங்கள் பூரியென்ற க்ஷேத்திரம் !
ஏடிருக்கும் அங்கென போதேந்த்ராள் வந்திட்டார் !

ஏடிருக்கும் வீட்டினை முன்னிரவில் கண்டிட்டார் !
எழுந்து காலை கேட்கலாம் (என) திண்ணையிலே படுத்திட்டார் !
கௌமுதி கிடைத்திடும் என நம்பிக்கை வந்தது !
இராமநாமம் ஜபித்துமே இறைவனை தொழுதிட்டார் !

(முன்பு ஒரு தம்பதியர்)

காசிக்கு சென்றனர் கருமம் தன்னை தொலைக்கவே
பாதிவழி செல்கையில் பத்தினியை ஒருகூட்டமும்
சாதியிலே திருடராம் தட்டிக்கொண்டு போய்விட
மீதி வழி காசிசென்று மீளவும் திரும்பினார் !

வழியினிலே திரும்பவும் வந்த மனை கண்டிட்டார் !
ஊழினால் இருவரும் ஒன்று சேர கிடைத்திட்டார் !
வேதம் சொல்லும் விதியினால் சேரவில்லை இருவரும் !
வழி சொல்லும் பெரியவரை வழிமுழுதும் தேடிட்டார் !

ஞாயம் கேட்க இருவரும் நல்லவரைத் தேடினர் !
தூய்மையான வல்லுனர் பூரிநகர் உள்ளதால்
வாய்மை கொண்ட இருவரும் விரைவாக வந்தனர் ! (அங்கு)
உய்யவந்த போதேந்த்ரர் (நாம)கௌமுதிக்காய் காத்திருந்தார் !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

திண்ணையிலே படுத்த வீட்டில் தம்பதியர் வந்தனர் !
பின்னிரவில் தம்பதியர் விடைகேட்க அங்கு வந்தார் !
கண்விழித்து திறந்திட காதைதிறந்து வைத்திட்டார் !
தண்மையான சொற்களை தனயன் சொல்கின்றார் :-

"திருடர் கவர்ந்த மனையை தீர்மானமாய் சேர்த்திடலாம் !
திருமிகுந்த திரைகடலில் தலைமூழ்கி எழுந்திடலாம் !
அருள்நிறைந்த இராம நாமம் மும்முறை கூறிடலாம் !
கருமையான நெற்றியது குங்குமமாய் மாறிவிடும்"

காலையில் அனைவரும் கடற்கரையில் கூடினரே !
தலைமூழ்கி தம்பதியர் இராம நாமம் நவின்றனரே !
நிலையாக நெற்றியிலே குங்குமம் திகழ்ந்திடவே
பலரும் அதைக்கண்டு புல்லரித்து நின்றனரே !

திருடர் கவர்ந்த மனைவியை திரும்ப சேரவருகையில்
கருத்துடன் இராம நாமம் காதில்கூற இருவரும்
மறுபடி இணைந்தனரே மஹத்துவம் அறிவமோ ?
மக்கள் கூட்டம் மஹிமையை மனம்தன்னில் அறியுமோ?

போதேந்த்ராள் வந்துவிட்டார் ! புகழ்தன்னை அறிந்துவிட்டார் !
ஆதரவாய் அவர் வீட்டில் அருள்கூறி அமர்ந்திட்டார் !
மாதாவும் அவர்களுக்கு மேலாய் உணவளித்தார் !
கௌமுதியை தேடிவந்த கதையை அவர் கூறிட்டார் !

நாமத்தின் மஹிமையது கௌமுதியில் உள்ளது !
சாமத்தின் வேதமென ஜகத்தினிலே கொடுத்திடும் !
நாமத்தை ஸித்தாந்தம் செய்திடவே நல்லகாலம் !
தம்மிடம் தான்வந்து தத்துவத்தை போதித்தார் !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

ராம ராம ராமவென்று நாமமதை நவின்றிட்டால்
காம காம காமமது காததூரம் ஓடுமே !
நாமமதை ஸித்தாந்தம் செய்ய வந்த நல்லவர்
சேமமாக நாம் விளங்க சக்தியதை தந்தவர் !

போதத்தின் இந்திரர் பக்குவத்தின் மித்திரர் !
வேதத்தின் விழுப்பொருளை விளக்கமாக விரித்தவர் !
ஓதி ஓதி ஓதி ஓதி ஒன்றான உண்மையை
நேதி நேதி நேதி என்று நாளும் நமக்கு சொன்னவர் !

பக்தியின்றி பலமுறை பாடம் கேட்டு பயனுண்டோ ?
பக்தியுடன் ஒருமுறை நாமம் சொல்ல வல்லீரேல்
முக்தி கையில் வந்திடும் ! மனமும் நன்றாய் ஆகிடும் !
இத்தகைய பாடத்தை இவ்வுலகம் ஈன்றாரே !

60 -பீடாதிபதி முதல் 67 பீடாதிபதி வரை

அவர் வழியில் பலபலவாய் அருள் குருக்கள் வந்திட்டார் !
தவறாது சத்தியத்தை சகத்திற்கு தந்திட்டார் !
கவலைகளை நீக்கிட கருத்துக்களை சொல்லிட
நவநவமாய் வந்துமே நாயகர்கள் இருந்கிட்டார் !

ஆதிசேஷன் வந்தாலும் அவர்பெருமை அளக்குமோ ?
வேதி கட்டி வணங்கிடும் வேதம்கூட முழுமையோ ?
நேதி நேதி என்று சொல்லி நகர்ந்த விதம் அறிவமோ ?
பாதியாக போய்விடும் பாக்களும் இப்பாரிலே !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

68. ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்-8 (1907 ஏ.டி.)

ஸ்ரீமஹாபெரியவாள்

நடமாடும் தெய்வம் என்று நானிலத்தில் சொல்லுவார் !
நடமாடும் தெய்வமாகி நாலுவேதம் காத்தவர் !
படமாடும் பாம்புதெய்வம் பெயரினிலே பெற்றவர் !
தடுமாறும் மாந்தரையே தூய்மையாக்கி தந்தவர் !

தெய்வத்தின் தோற்றம்

விழுப்புரத்தில் பிறந்து நம்மை விழாது காத்து நிற்பவர் !
கழுத்திலே மாலைபோட்ட கபாலி ப்ராண நாயகர் !
அழுத்தமாய் பேசிநம்மின் அக்ஞானம் தீர்ப்பவர் !
அழுதுகாலை பற்றினால் அழாது காக்கும் ஆண்டவர்!

வேதம் தன்னை வாழ்விக்க வேகம் தன்னை கொண்டுமே
பாதம் தன்னை பற்றியோர்க்கு பரகதியை தந்துமே
பேதம் தன்னை போக்கியே பக்குவத்தை தந்துமே
ஏது துணை என்போர்க்கு ஏற்ற துணை ஆனாரே !

கல்வி

சிறுவயதில் கல்வியினை சீக்கிரமாய் கற்றவர் !
துருதுருப்பாய் தன்னையாக்கி தேடல்தன்னைக் கொண்டவர் !
வரும் செய்தி தன்னைக் காணும் சித்தியினை பெற்றவர் !
சிறுவரான நமக்கு இங்கு சக்தியினைத் தந்தவர் !

பிதகோரஸ் தியரமதை பேதமின்றி கற்றாரே !
அதனுடைய தத்துவத்தை அப்புறமாய் தந்தாரே !
விதவிதமாய் பலகற்று வித்தையினை அறிந்தாரே !
கதைகதையாய் கூறிநம்மை கரையேற்றி விட்டாரே !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

மடத்துடன் தொடர்பு

மடத்திருந்த மஹான் தன்னை தினம் தினம் கண்டுமே
திடம்மிகுந்த தத்துவத்தை தீர்த்தமாடி தெரிந்துமே
வடம் இழுக்கும் தேராக மனந்தனை இழுத்துமே
சடமான வாழ்வினுக்குள் சக்தியினை பெற்றாரே !

பெரியவாளும் சிறுவர் இவர் சீர்கண்டு வியந்துமே
அரிதான அருஞ்செயலை அவரிடம் கண்டுமே
பெரிதான பொறுப்பேற்க பெயர் தன்னை கேட்டிட
உரிய இடம் இதுஎன்றே உள்மனதில் கண்டாரே !

நாடகத்தில் நடித்தல்

அடிக்கடி அவரிடம் அருகில் நின்று வந்தாரே !
படிக்கும் பாடம் என்னவென்று பாதையினை வகுத்தாரே !
நடிக்கும் போது வாழ்விதுவே என உணர்ந்தாரே !
நடிகனாகி வாழ்ந்து நம்மை நன்மை பெற செய்தாரே !

அடுத்த பீடத்தில்

பற்றில்லா இவரையே பீடமேற்ற பெரியவரும் நினைத்திட
உற்றுஉற்று பார்த்திவரை உயர்திடவே எண்ணிட
கூற்று என்ற கொடியவனும் கடிது வந்து நின்றிட
மாற்றாக மஹாதேவர் மடம் தன்னை ஏற்றாரே !

மஹாதேவர் தன்னிடம் பெரியவரும் கூறினார் :-
"ஸ்வாமிநாதன்தான் இந்த பீடத்திற்கு உகந்தவன் !
நாமிறந்த பிறகு இந்த நாட்டினைக் காப்பவன் !" (என)
காமிதார்த்தம் தன்னை தரும் கடவுளாக மாறிட்டார் !

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

அடுத்து வந்த பெரியவாளும் அடக்கமாக இருந்திட்டார் !
அடுத்து நிற்பான் அந்தகன் என்று அறிந்தாரோ இல்லையோ !
படுத்த படுக்கை ஆனபின்னர் சேதிதன்னை அனுப்பினார் !
விடுத்த அம்பைப்போல விரைவாக வரச்சொன்னார் !

தொடுத்த இந்த சேதிகேட்டு ஸ்வாமிநாதர் விரைந்திட்டார் !
படுத்தும் இந்த பவமதுவும் போய்விடுமோ நினைத்திட்டார்!
வடுகனாக இருந்தவர் வண்டியிலே வந்திட்டார் !
அடுத்த நபர் நாமென்று அறிவாலே அறிந்திட்டார் !

பாதி தூரம் செல்கையில் பதம் ஏகிவிட்டார் முன்னவர்!
ஓதிவிட்டார் இராம இராம உண்மையை அறிந்துமே !
நீதி தன்னை அறிந்தவர் நேர்மையாக இருந்திட்டார் !
மீதி தூரம் மிகவிரைவாய் மடத்திற்கு விரைந்திட்டார் !

பெற்றோர்கள் வரும் முன்னர் பெரியவாளும் வந்துவிட்டார் !
உற்ற துணை எதுவென்று உண்மையாக அறிந்திட்டார் !
கற்ற வித்தை எல்லாம் காலன் கொடுபோவானோ ?
முற்றத்திலே நின்று மனமுருகி தொழுதிட்டார் !

பீடமேறல்

அடுத்த பீடமேறவேணும் நீங்கள்தான் தகுதியென்று
அடுத்தவர் கூறிவிட்டார் அதையேற்க வேணுமென்க
உடுத்திவிட்டார் துறவாடை உண்மைதான் உறவாக !
அடுத்துவந்த பெற்றோர்கள் ஆச்சர்யம் தனைஅடைய !

முன்னிருவரின் ஸமாதிக்கும் மந்திரம் தனை ஓதி
தன்னையார் என்றறிந்து தாய்க்கும் திடம் ஓதி
மனையாவும் துறந்து மடம் தன்னில் மனம் ஆக்கி
சினமென்ற சரக்கை போக்கி ஸத்குருவாய் ஆகினாரே !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection Nev

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

இடுப்பிலே காவியாடை ! இயல்பிலே கருணை உள்ளம் !
சடுதியில் சாமியாகி சங்கடங்கள் தான் துறந்தார் !
விடுதியோ வீடு மக்கள் ? வீரனாக திகழ்ந்திட்டார் !
அடுத்த பீடம் ஏறினார் ! அன்புகொண்ட சந்திரர் !

அடுத்த பீடமேற்றதும் அங்கு அதிகமாக கற்றிட்டார் !
தொடுத்தவினா அனைத்திற்கும் விடைதன்னை பகர்ந்திட்டார் !
சடுதியில் சிரத்திலே சங்கதிகள் ஏற்றிட்டார் !
கடுத்த பாதம் அறியுமோ கால்களின் தன்மையை ?

விஜய யாத்ரை

பாதங்கள் கடுக்கவே பாதயாத்ரை தொடர்ந்திட்டார் !
காதங்கள் கடந்துமே கடவுள் பெயர் கூறிட்டார் !
வாதங்கள் பலசெய்து விஷயத்தை விளக்கிட்டார் !
ஆதரவாய் திகழ்ந்து நமக்கு ஆசிதன்னை தந்திட்டார் !

காடுமலை சுற்ற வேண்டி கால்கடுக்க வேணுமோ ?
காடுமலை சுற்றி வந்து காணும் கடவுள் அறிவரோ ?
காடுமலை சுற்றி நமக் கறிவுச்செல்வம் தருவரே !
நாடு போற்றும் நல்லவர் ! நம்சுமை சுமப்பரே !

சுற்றி சுற்றி பாரதத்தை சூழ்ந்துநின்ற தீமையை (காலால்)
சுற்றி சுற்றி வந்துமே சாராமல் காத்தவர் !
பற்றி பற்றி பாதத்தை பூசை செய்ய வல்லீரேல்
பற்றி நின்ற பகையது பஞ்சுபஞ்சாய் பறக்குமே !

பரகதிக்கு புண்ணியம் பலப்பல பாரிலே !
வரம்தரும் தெய்வங்கள் வேதம் கூறுமாயிரம் !
தரமில்லை என்று நமை தள்ளுகின்ற சாத்திரம் !
நிரந்தரம் அவர்பதம் நினைக்க நன்மை தாருமே !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

பிறைசூடும் பெம்மானாம் பெரியவாளின் மேன்மையை
தரையிலே நாம் இருந்து தன்மையை அறிவமோ ?
குறைகள் யாவும் நீக்கியே கும்பிட்டால் தெரியுமோ ?
மறையோதும் மறையோரே மங்களங்கள் மலர்ந்ததே !

தன்மைகள்

உதவி செய்வாய் என்று சொன்னால் ஊரில் பலர் ஓடுவார் !
விதவிதமாய் வேடிக்கையாய் உதவி செய்த உத்தமர் !
பதவி பணம் பறந்துவிடும் பரம்பொருளே நித்தியம் !
சதமாக வாழ்ந்தவர் ! சத்தியத்தின் நாயகர் !

பேச்சு பேச்சாய் பேசி நாளை போக்குகின்ற மாந்தரே
மூச்சு நின்று போனபின்னர் பேச்சு துணை வாருமோ ?
ஏச்சு போக ஏகாந்தம் மௌனம் என்று நாட்டினில்
மெச்ச வாழ்ந்த முனிவரை மனதினாலே அறிவீரே !

கலகம் செய்யும் மனமது கடவுள் காண வேண்டுமே !
நிலவு போல நன்மையை நாளும் செய்ய வேண்டுமே !
நிலவு தன்னை தலை கொண்ட நல்லவரை நினைத்திட
புலர்ந்திடும் பொழுதுமே பூக்கள் பறித்து போடுமே !

அன்புடன் பேசுவது ஆசார்யாள் வழக்கமாம் !
தெம்புமிக வந்திடும் தேனான அவர் தொனியிலே !
அம்பாகத் தைத்திடும் அவம்செய்த போதிலே !
நம்பிக்கை வந்திடும் நாலுவேத நூலிலே !

சங்கரரின் தோத்திரங்கள் சத்தியமாய் சொல்லுவார் !
அங்கு பொதிந்த தத்துவங்கள் அருவியாக வந்திடும் !
தங்கம் வெள்ளி பணத்திலே துளிகூட ஆசையும்
இங்கில்லை அவருக்கு இதையறிவாய் என்றுமே !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

அற்புதங்கள்

அற்புதங்கள் பலப்பல அவர்செய்தார் உலகிலே !
கற்பகமாய் கொடுத்திட கருணை உண்டு மனதிலே !
உற்பவித்து வந்திடும் உண்மைகள் பேச்சிலே !
அற்பமான பிறவி நமக் கதிசயமாய் மாறிடும் !

திருமணமென்று வந்தால் தாலி தரும் அற்புதம் !
திருக்கோயில் செல்கையில் சொல்லிடுவார் தத்துவம் !
கல்லிலே பொறித்த கல்வெட்டு கரதலப் பாடமாம் !
நல்லவர்க்கு நாயகர் ! நாளும் துணை வருவரே !

யானை மீது நாலுபேர்கள் மடத்தை தாண்டி போகையில்
யானை காட்டி வாழ்கிறோம் ஏதோ மண்ணில் பிழைக்கிறோம்
நாவினால் இதைச்சொல யானும் இந்த வாழ்க்கைதான் என்றுமே
நகைபட கூறுவார் அவர் மனது அறிவமோ? நானிலத்தோர் கூறுவீர்!

சொன்னபடி வாழ்ந்திட சுகமும் உண்டு சகத்திலே !
அன்னம் தண்ணி அனைத்துமே ஆண்டவனின் பிச்சையே !
சன்னமான குரலிலே சாத்திரத்தை அவர் சொல்கையில்
சின்னத்தனம் எல்லாமும் சிதைந்திடுமே செய்கையில் !

பட்டுக்காக பாரிலே பகட்டு செய்வார் பலருமே !
பட்டை துறந்து கதராடை அணிந்திடுவார் அவருமே !
நிட்டை செய்து பாருமே ! நல்லவற்றை நாடியே !
இட்டமான தெவ்விடம் ? இறைவன் வாழ்வதெவ்விடம் ?

குட்டையாக இருந்தாலும் குறைகள் ஒன்றும் இல்லையே !
நெட்டையான மாலுமே வாமனராகி வளர்ந்ததில்லையோ?
நெட்டை குட்டை என்பதெல்லாம் நாம் பேசும் பேச்சுதான் !
வட்டமான உலகிலே வேதமுறை அறிவரோ ?

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

இல்லை இல்லை என்று கூறும் நாத்திகரின் நாட்டிலே
தொல்லை இல்லை என்று நாளும் தோத்திரத்தை கூறியே
கல்லிலே இறைவன் இல்லை என்று கூறும் மாந்தரை
கல்லிலே இறைவன் தன்னை காணவைத்த தெய்வமே !

சிவாய அஞ்செழுத்தால் சிவனை நகர்த்த வைத்தவர்
அபாயம் என்று அடைந்தபேர்க்கு அஞ்சலென்றருள்பவர்
கபாலம் தன்னில் கடவுள் கொண்டு காதலைச் செய்பவர்
சிவாய நம என்று சொல்லி ஸத்குருவைச் சேர்வமே !

வில்வம் இல்லையென்று விசனப்பட்டு நிற்கையில்
தில்லையாடும் சிவனுக்கு சீர்கொணர்ந்து வைக்கவும்
பிள்ளையவன் யாரென பேர்கேட்டு பார்க்கையில்
பிள்ளையவன் கூறுவான் பெரும் பேச்சு பேசுவான் !

"எந்தன் தந்தை என்னிடம் ஏகமாக பேசுவார் !
பந்தம் இந்த வாழ்க்கையென்று பலவிதமாய் கூறுவார் !
எந்தனுக்கு ஏதேனும் ஏற்றம் செய்ய விழைந்தீரேல்
பந்தம் தன்னை நீக்கியே பதம் தர வேணுமே !"

புன்சிரிப்பு பெரியவாள் பதிலொன்றும் இல்லாமல்
தன்னிடம் நகர்ந்திட சிறுவனும் சென்றிட்டான் !
பலகாலம் நகர்ந்தது ! பெயர் யாவும் மறந்தது !
வலம் வந்து நாட்டையே வேறுஇடம் சென்றது ! (பயணம்)

ஓர் நாள் காலை.......

குளித்து வந்த பின்னரவர் திரும்பவும் குளித்திட்டார் !
குளித்திட்டார் ஏழுமுறை கும்பிட்டு திரும்பிட்டார் !
அளித்திட்டார் அறிவுரை அனைவரும் திகைத்திட்டார் !
குளித்ததற்கு காரணம் குவலயத்திற்கு அளித்திட்டார் !

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

"வில்வம் கொண்டு வந்த பையன் வியனுலகை துறந்திட்டான் !
பலகாலம் பிறக்கவேண்டி பிரம்மனவன் எழுதிட்டான் !
தலைமுழுகி தலையெழுத்தை தானேதான் மாற்றினேன் !"
வலைநீக்கி வியனெழுத்தும் வேதமாக மாறியதே !

(வேறு)

பீடமேறும் முன்னர் அவர் பக்கத்திலே ஓர் பெரியவள் !
வாடிநிற்கும் சிறுவருக்கு வடை சுட்டு தருபவள் !
ஓடி சென்று ஓர்நாள் அவர் ஒரு ரூபாய் பிறகென
பாடி உன்னை பூர்ணகும்பம் வைப்பனோ என்றிட்டாள் !

பிறகவர் பட்டமேற்று பலநாட்கள் கழிந்திட
குருவவர் அந்தக்ராமம் கடந்து செல்ல வந்திட்டார் !
பூர்ணகும்பம் வைத்துமே பாட்டியவள் அழைத்திட
பார்த்தாயா உன்னை நான் அழைக்கவைத்தேன் என்றிட

பாட்டியும் கண்ணீர் விட்டு பெரியவாளை வணங்கினாள் !
ஏட்டிலே எழுதிவைத்து இறைவன் காண முடியுமோ?
காட்டிலே குளத்தில் மூழ்கி கடவுள் காண முடியுமோ ?
பாட்டியாக இருந்தாலும் அன்பு மனம் வேண்டுமே !

(வேறு)

பெரியவா சிறியவா அனைவருக்கும் ஒன்றவா !
அரியும்வா அரனும்வா அந்த காக்ஷி காணவா !
உரியவா நமக்கெலாம் உளம் தன்னில் உணர்ந்தவா !
மரியவா நாமும் இங்கு மண்ணிலே பிறந்தவா ?

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New

Digitized by Sarayu Trust Foundation, Delhi and eGangotri.Funding by MoE-IKS

RITANBHARA JANA SABHA

- Publications of rare collections
- Workshop about Srividya
- Promote Srividya as Brahmavidhya

http://vaikari.net
email : info@vaikari.net

With best compliments from

Eucare Pharmaceuticals Private Limited

Mr. S. Sridharan (Managing Director)
Plot No. AC 25-B SIDCO Industrial Estate
Thirumudivakkam, Chennai - 600 044,
Tamil Nadu, India.

. In Public Domain. Sanskrit-Tamil Collection of Nagarajan Delhi, Arutsakthi R. Nagarajan Collection New